

புதுக்கோட்டை மாநகராட்சி, கலைஞர் கருணாநிதி அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, புதுக்கோட்டை மாவட்ட நிர்வாகம், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், தமிழ்நாடு மாநில ஊரக நகர்புற வாழ்வாதார இயக்கம் ஆகியவை இணைந்து நடத்தும், மாபெரும் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாமினை அமைச்சர்கள் எஸ்.ரகுபதி, சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.மு.அருணா தலைமையில் 23.08.2025 அன்று துவக்கி வைத்து, தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்கள். உடன் மரு.வை.முத்துராஜா எம்.எல்.ஏ., துணை மேயர் எம்.லியாகத் அலி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி.பா.ஜெயசுதா, மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்கள் மோ.மணிகண்டன், பெ.வேல்முருகன் (தொ.வ) மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.



கரூர் மாநகராட்சி பகுதிகளில் ரூ.7.41 கோடி மதிப்பிலான அரசு வளர்ச்சி திட்ட பணிகளை கரூர் சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில் பாலாஜி தொடங்கி வைத்தார். அருகில் கரூர் மாவட்ட கலெக்டர் மீ.தங்கவேல், மேயர் கவிதா கணேசன், ஆணையர் சுதா, துணை மேயர் தாரணி சரவணன், மண்டலக் குழுத் தலைவர்கள் எஸ்பி.கனகராஜ், ஆர்.எஸ்.ராஜா, அன்பரசு, சக்திவேல் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் உள்ளனர்.



புதுக்கோட்டை வடக்கு மற்றும் தெற்கு மாவட்ட பொறியாளர் அணி மாநகர, ஒன்றிய, நகர, பேரூர்க் கழக நிர்வாகிகள் நேர்காணல் புதுக்கோட்டை மாவட்டக் கழக அலுவலகத்தில் வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லபாண்டியன் தலைமையில் மாநிலத் துணைச் செயலாளர் பரமேஷ் குமார் முன்னிலையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் வடக்கு மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் எஸ்.வி.ஆர்.ஸ்டாலின் மற்றும் தெற்கு மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் ராமசாமி மற்றும் பொறியாளர் அணி நிர்வாகிகள் 150க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.




தருமபுரி மேற்கு மாவட்டம், அனுமந்தபுரத்தில் நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின்" முகாமில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வேண்டி விண்ணப்பித்த பொதுமக்களுக்கு உடனடியாக நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சியர் ரெ.சதீஸ் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் தருமபுரி கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் வழக்கறிஞர் ஆ.மணி ஆகியோர் வழங்கினர். உடன் காரிமங்கலம் மேற்கு ஒன்றியச் செயலாளர் வழக்கறிஞர் எம்.வீ.டி.கோபால், பாலக்கோடு சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் டி.எம்.அரியப்பன், வட்டார வளர்ச்சி அலுவலர் சர்வோத்தமன், மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் ஏ.வி.குமார் மற்றும் கழகத்தினர் உள்ளனர்.

## கடலூர் மாவட்டம், குடிகாடு கிராமத்தில் தனியார் தொழிற்சாலையில்

# மதில் சுவர் சாய்ந்து உயிரிழந்த இருவர் குடும்பத்தினருக்கு ஆறுதல் - நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஆக.25-

கடலூர் மாவட்டம், குடிகாடு கிராமத்திலுள்ள தனியார் தொழிற்சாலையில் மதில்சுவர் சாய்ந்த சம்பவத்தில் உயிரிழுந்தஇருவர்குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி வழங்கிட தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

முதல்வர் அவர்களின் அறிவிப்பு வருமாறு:-

கடலூர் மாவட்டம் மற்றும் வட்டம், குடிகாடு கிராமத்தில் இயங்கி வரும் தனியார் தொழிற்சாலை ஒன்றில் நேற்று முன்தினம் (23.8.2025) மாலை 6 மணியளவில் மதில் சுவர் சாய்ந்ததில் சம்பவ இடத்தில் பணிபுரிந்துவந்த பூதங்கட்டி கம்பளிமேடு பகுதியைச் சேர்ந்த திருமதி. இளமதி (வயது 35) க/பெ.அன்பு மற்றும் திருமதி. இந்திரா (வயது 32) க/பெ. தேவர் ஆகிய இரண்டு பெண்கள் உயிரிழுந்தனர் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த இருவரின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா நான்கு இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்.

## மீண்டும் மு.க.ஸ்டாலின் அவர்களே முதல்வராவார்!

# அமித்ஷாவின் அரசியல் தமிழ்நாட்டில் எடுபடாது!

## நெல்லையில் அமைச்சர் கே.என்.நேரு பேட்டி!

**நெல்லை. ஆக. 25-**

**தி.மு.க.வை வேரோடு பிடுங்க வேண்டும் என அமித்ஷா சொல்கிறார். வேரோடு பிடுங்கப்படும் பயிர் தான் மிக பிரம்மாண்டமாக வளரும். தமிழகத்தில் எங்களுக்கு யாருமே போட்டி கிடையாது. பா.ஜ.க. அ.தி.மு.க. கூட்டணியை அவர்கள் தொண்டர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை இதையெல்லாம் வைத்துக்கொண்டு வெற்றி பெறப் போகிறோம் என பா.ஜ.க.வினர் சொல்கின்றனர் என நெல்லையில் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு செய்தியாளர்களிடம் பேட்டியின் போது தெரிவித்தார்.**



நெல்லை மாநகராட்சி பாளையங்கோட்டை பேருந்து நிலையம் அருகில் ரூபாய் 5 கோடி மதிப்பில் அமைக்கப்பட உள்ள முதல்வர் படைப்பகம் கட்டுமானப் பணிகளை சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு, நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு ஆகியோர் அடிக்கல் நாட்டி பணிகளை துவக்கி வைத்தனர்.

இதனை தொடர்ந்து நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

நெல்லையில் நடைபெற்ற பா.ஜ.க கூட்டத்தில் அமித்ஷா தி.மு.க.வை வேரோடு பிடுங்கி அகற்றுவோம் என சொல்கிறார். விவசாயத்தில் வேரோடு பிடுங்கி நட்டால் தான் பயிர் நன்றாக விளையும்.15 வருடங்களாக பா.ஜ.க வேரோடு பிடுங்கும் வேலையை தான் பார்த்துக் கொண்டிருக்கிறது. அவர்களால் எதையும்செய்ய முடியவில்லை. தி.மு.க. கூட்டணி தான் வெற்றி பெற்றது. வருங்காலத்திலும் தி.மு.க. தான் வெற்றி பெறும்.

**அவர்கள் நினைப்பது நடக்காது!**

நயினார் நாகேந்திரன் தலைவராக மேடையில் உள்ளார். மிகப்பெரிய கூட்டத்தை கூட்டியுள்ளார் அவர்களது ஆசையை அவர்கள் சொல்லி வருகிறார்கள்.எங்களது ஆட்சியை நன்றாக இருப்பதாக எப்படி பா.ஜ.க.வினர் சொல்வார்கள்.எங்கள் ஆட்சி மீது பா.ஜ.க வைப்பது குற்றச்சாட்டு அல்ல, அவர்களது ஆசை. நாங்கள் தான் தேர்தலில் வெற்றி பெறுவோம். அமித்ஷா பேசிய இதே ஊரில் மிகப்பெரிய வெற்றியை பெறுவோம். அவர்கள் நினைப்பது நடக்காது.

அ.தி.மு.க. பா.ஜ.க. இருவரும் கூட்டணி. ஆனால் அ.தி.மு.க. ஆட்சியில் இருந்தபோது இருண்ட ஆட்சியாக இருந்தது. அமித்ஷா கண்ணுக்குத் தெரியவில்லை. தமிழகத்திற்கு இது வரை அமித்ஷா மூன்று முறை வந்து விட்டார். தமிழகத்திற்கு வரும்போதெல்லாம் அமித்ஷா கூட்டணி ஆட்சி என்கிறார், எடப்பாடி எப்போதும் தனித்து ஆட்சி என்கிறார். இதற்கு அமித்ஷாவும் விளக்கம் சொல்லவில்லை, எடப்பாடியும் விளக்கம் சொல்லவில்லை.

அ.தி.மு.க.வின் கூட்டணியை கீழே உள்ளவர்கள் ஒத்துக்கொள்ளவில்லை. அ.தி.மு.க- பி.ஜே.பி. தொண்டர்கள் இந்த கூட்டணியை ஏற்றுக் கொள்ளவில்லை. இதை வைத்துவிட்டு அவர்கள் நாங்கள் ஜெயிக்கப் போகிறோம் என சொல்கிறார்கள்.

**முதல்வருக்கு ஆதரவு பெருகி வருகிறது!**

முதல்வரை யார் எந்த பெயரை வைத்து அழைத்தாலும் மீண்டும் தமிழகத்தின் முதலமைச்சராக தளபதி அவர்கள் தான் வரப்போகிறார். பொதுமக்கள், மகளிர் போன்றோர் மிகப்பெரிய ஆதரவை முதல்வர் அவர்களுக்கு தந்து வருகின்றனர். எம்.ஜி.ஆருக்கு இருந்த மகளிர் ஆதரவை தாண்டி இப்போது முதலமைச்சருக்கு அவர்களது ஆதரவு பெருகி வருகிறது. நடைபெற உள்ள தேர்தலில் வெற்றி பெற்று மீண்டும் தி.மு.க ஆட்சி அமையும். மீண்டும் தமிழக முதல்வராக தி.மு.க தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வருவார்கள்.

தோற்றுப் போய்விடுவோம் என எண்ணி தான் பீகார், ஆந்திரா போன்ற இடங்களில் பிரச்சினைகளை பா.ஜ.க.வினர் செய்து வருகின்றனர். ஆந்திராவில் சந்திரபாபு நாயுடு இருதலைக்கொள்ளி எறும்பாக இருந்து வருகிறார். தமிழகத்தில் தி.மு.க.விற்கு போட்டியே கிடையாது. எதிரி யாராக இருந்தாலும் நாங்கள் தான் வெற்றி பெறுவோம்.

இவ்வாறு அமைச்சர் கே.என். நேரு தெரிவித்தார்.

நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் மரு.இரா.சுகுமார், நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா. ஆவுடையப்பன், நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல்வகாப், மேயர் ராமகிருஷ்ணன், மாநகராட்சி ஆணையாளர் மோனிகா ராணா, துணை மேயர் ராஜு, மாவட்ட ஊராட்சி தலைவர் வி.எஸ்.ஆர்.ஜெகதீஷ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## எளிமை, மாணவர்கள் மீது கனிவு, செய்யும் தொழிலில் தெளிந்த அறிவு உள்ளிட்ட பண்புகளால் ஆயிரக்கணக்கானோரின் வாழ்க்கையை மாற்றியவர்!

# வாஜிராம் & ரவி ஐ.ஏ.எஸ். பயிற்சி மைய இயக்குநர் பி.எஸ்.ரவீந்திரன் மறைவு, இளைஞர்களுக்குப் பேரிழப்பு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உருக்கம்!

**சென்னை, ஆக. 25 -**

**வாஜிராம் & ரவி ஐ.ஏ.எஸ். பயிற்சி மையத்தின் இயக்குநர் பி.எஸ். ரவீந்திரன் அவர்களின் மறைவையொட்டி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், "எளிமை, மாணவர்கள் மீது கனிவு, செய்யும் பணியில் தெளிந்த அறிவு ஆகிய பண்புகளால் ஆயிரக்கணக்கானோரின் வாழ்க்கையை மாற்றிய பி.எஸ்.ரவீந்திரன் அவர்களின் மறைவு இளைஞர் சமுதாயத்துக்குப் பேரிழப்பு!" என்று குறிப்பிட்டுள்ளார்.**



முதல்வர் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

வாஜிராம் & ரவி IAS பயிற்சி மையத்தின் இயக்குநர் பி.எஸ். ரவீந்திரன் அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து வேதனையடைந்தேன்.

UPSC தேர்வு எழுதும் மாணவர்களுக்கு 40 ஆண்டுகளாகப் பாடமெடுத்து வந்த ரவீந்திரன் அவர்கள், தனது ஆழ்ந்த, அகன்ற அறிவால் எத்தனையோ சாதனையாளர்களை உருவாக்கியுள்ளார்.

அரசு நிர்வாகத்தில் பெரும் பங்காற்றும் ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் பலர், இவரால் பட்டை தீட்டப்பட்ட மாணவர்கள் என்ற வகையில் இந்தியாவின் வளர்ச்சியில் இவரது பணி அளப்பரியதாகும்.

தற்போது தமிழ்நாடு அரசில் பணியாற்றி வரும் பல அதிகாரிகளும் இவரால் உருவாக்கப்பட்ட பாடக்குறிப்பு களால் பயன்பெற்றவர்கள், நேர்முகத் தேர்வுக்குப் பயிற்சி பெற்றவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

எளிமை, மாணவர்கள் மீது கனிவு, செய்யும் பணியில் தெளிந்த அறிவு ஆகிய பண்புகளால் ஆயிரக்கணக்கானோரின் வாழ்க்கையை மாற்றிய அவரது மறைவு இளைஞர் சமுதாயத்துக்குப் பேரிழப்பாகும்.

அவரை இழந்து வாடும் குடும்பத்தினர், நண்பர்கள், மாணவர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு இரங்கல் செய்தியில் முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

## திருவண்ணாமலை வடக்கு மாவட்டம்

# ஆரணி நகரக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

## தலைமைக் கழக அறிவிப்பு!

திருவண்ணாமலை வடக்கு மாவட்டம், ஆரணி நகரச் செயலாளராக பொறுப்பு வகித்து வரும் ஏ.சி.மணி அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, கழகப் பணிகள் செவ்வனே நடைபெற, அவருக்குப் பதிலாக, திரு.**வ.மணிமாறன்** (24, கந்தசாமி புதுத் தெரு, சைதாப்பேட்டை, ஆரணி. திருவண்ணாமலை மாவட்டம்.) அவர்கள் ஆரணி நகரக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட நகரக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்.

"**அண்ணா அறிவாலயம்**"
சென்னை - 600 018
நாள்- 23.08.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

## தி. மு. க. தொழிலாளர் அணி

# இராமநாதபுரம் மாவட்ட துணை அமைப்பாளர் நியமனம்!

## தி.மு.க. தொழிலாளர் அணிச் செயலாளர் பிடிசி ஜி.செல்வராஜ் அறிவிப்பு!

இராமநாதபுரம் மாவட்ட தி.மு.க. தொழிலாளர் அணி துணை அமைப்பாளராக **என். சண்முகநாதன்** (15/98ஏ1, சொக்கவேல் பிள்ளை நகர், சௌந்தரியம்மன் கோவில் தெரு, இராமேஸ்வரம், இராமநாதபுரம் மாவட்டம்) அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாவட்ட தொழிலாளர் அணி நிர்வாகிகளுடன் இவர் இணைந்து பணியாற்றுவார்.

"**அண்ணா அறிவாலயம்**"
சென்னை - 18
நாள்- 23-08-2025.

**பிடிசி ஜி.செல்வராஜ்,**
செயலாளர்,
தி.மு.க. தொழிலாளர் அணி



நாகை மாவட்டம், கீழ்வேளூர் ஒன்றியம் அகர கடம்பனூர் எரவாஞ்சேரி திருக்கண்ணங்குடி ஆகிய ஊராட்சிகளுக்கான "உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின் சிறப்பு முகாமில் நாகை மாவட்டக் கழகச் செயலாளர், தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழகத் தலைவர் என்.கௌதமன் கலந்துகொண்டு பார்வையிட்டார். உடன் தலைமைச் செயற்குழு உறுப்பினரும், கீழ்வேளூர் வடக்கு ஒன்றியச் செயலாளர் பா.கோவிந்தராஜன், கீழ்வேளூர் தெற்கு ஒன்றியச் செயலாளர் கே. பழனியப்பன், மாவட்டப் பிரதிநிதி ஸ்ரீ வீரமணி, கிளைக் கழக நிர்வாகிகள் பிரபாகர், மணி கருணாநிதி, பாலு மற்றும் பலர் உள்ளனர்.



அரசின் பல்வேறு சேவைகள் அனைத்து மக்களையும் நேரடியாகச் சென்றடைய "உங்களுடன் ஸ்டாலின்" முகாமினை, கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டச் செயலாளரும் – சட்டமன்ற உறுப்பினருமான ஒய்.பிரகாஷ் பார்வையிட்டு உரிய பயனாளர்களுக்கு சான்றிதழ்களை வழங்கினார். உடன் பாபு, நாகராஜ் மற்றும் அரசு துறை அதிகாரிகள் உள்ளிட்ட ஏராளமானோர் உள்ளனர்.